
# எழுச்சி
EZHUCHI

29.07.2020 புதன்கிழமை | இதழ் :01 | விலை : 30/= | தொலைபேசி இல : 0772576536 | மின்னஞ்சல் முகவரி: ezhuchi295@gmail.com

**அன்பான வாசகர்களுக்கு!**
மனித வாழ்வியலில்
நிலையான நிறுவல் பெறமுடியாத
சமூக விஞ்ஞானத்தின் கூறுகளைத் தேடி,
உண்மையின் முன்
நடுநிலைமையென்பது கிடையாது
என்ற குறிக்கோளுடன்
"எழுச்சி"
பத்திரிகை மக்கள் மன்றில்!

# மாற்றத்தினை நோக்கி தமிழர்களின் அரசியல்!








> **"வடக்கு-கிழக்குத் தமிழர்களின் அரசியல் எதிர்பார்ப்புகள் தோல்வியுற்றதன் வெளிப்பாடே அரசியல் மாற்றத்தை நோக்கித் தமிழ்ச் சமூகத்தைச் சிந்திக்கத் தூண்டியுள்ளது. விரக்தியின் விளிம்பை நோக்கித் தமிழர்கள் தள்ளிவரப்பட்டார்களா? அல்லது அவர்களே அந்நிலைமையை உருவாக்கிக் கொண்டார்களா என்ற கேள்வி எழுகின்றது."**

இலங்கைத்தீவினுள் தமிழர்கள் தரப்பில் ஆயுதரீதியாக முன்னெடுக்கப்பட்ட போராட்டங்கள் துட்டகைமுனு, எல்லாளன் என்ற ஆதி வரலாற்றையும் மகிந்த ராஜபக்ஷ, பிரபாகரன் என்ற நிகழ்கால வரலாற்றையும் கொண்டுள்ளது.

விடுதலைப் போராட்டங்களுக்கு முடிவுரை எழுதப்பட்ட உலக ஒழுங்கினுள் தமிழர் தம் இன விடுதலைப் போராட்டமும் காணாமலாக்கப்பட்டுள்ளது.

அவ்வாறு தோற்றுப்போன ஆயுத வரலாற்றைத் தமிழர் தரப்பு சரிசெய்துகொள்ள ஏற்படுத்திக்கொண்டதுதான் பல துருவங்களாக இருந்த தமிழர் தரப்புக்களை ஒன்று சேர்த்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு (TNA) என்னும் அரசியல் பலத்தை நிறுவி சர்வதேசங்களின் உதவியுடன் இனப்பிரச்சினை விடயத்தில் தீர்வை எட்ட முற்பட்டதாகும்.

ஆனால் நல்லாட்சி என்று சொல்லப்பட்ட மைத்திரிபால சிறிசேன ஆட்சியிலும் தமிழர் தரப்பு பலமான நிலையிலிருந்து கொண்டே பேரம் பேசும் அரசியலைச் செய்யத் தவறியது மாத்திரமன்றி, தமிழ் மக்களின் வெறுப்பையும் சம்பாதித்துக் கொண்டுள்ளது .

(தொடர்ச்சி 7ம் பக்கம்)

## போரினால் அழிந்த எமது சமூகம் போதையாலும் அழிய வேண்டுமா?

## கண்டுகொள்வார்களா எமது சமூகத் தலைவர்கள்?

நாளைய தலைமுறையை உருவாக்கும் பொறுப்பில், ஒவ்வொரு பெற்றோரும் தமது அடிவயிற்றில் நெருப்பைக் கட்டிக்கொண்டு குடும்பத்தை நடத்த வேண்டிய துர்ப்பாக்கிய நிலைமை எமது சமூகத்தில் தோற்றம் பெற்றுள்ளது.

யுத்தம் எமது வாழ்வியலில் பாரியதொரு மாற்றத்தை உண்டுபண்ணியிருந்தாலும், போதைப்பொருள் பாவனையானது எமது தாய், தந்தையரை, சமூக ஆர்வலர்களை உளவியல் ரீதியாகப் பாதிப்படைய வைத்துள்ளதுடன், போதைக்கு அடிமைப்பட்ட தமது பிள்ளைகளைப் போதைவஸ்துப் பாவனையிலிருந்து மீட்பதற்கு கலாசார விழுமியங்களினால் வெளியே சொல்ல முடியாது, வேதனைகளுடன் தமது பிள்ளைகளின் எதிர்காலம் கருதிப் போராடிக் கொண்டிருக்கின்றார்கள்.

அறிவோடு, ஆற்றல்மிகு சமூகத்தின் தேவை உணரப்படும் இன்றைய சூழலில், அறிவுத்தேடலில் ஈடுபட்டுள்ள எமது மாணவர்கள் போதைவஸ்து வியாபாரிகளினால் குறிவைக்கப்படுவதன் நோக்கம் தான் என்ன?

தமிழர் தாயகப் பிரதேசம் எங்கும் இப்போதைவஸ்துப் பாவனையானது சமூகச் சீர்கேட்டை உண்டுபண்ணி கல்வி வீழ்ச்சியிலும் ஆதிக்கம் செலுத்துகின்றதா?

சமூகத்தினிடையே மலிந்து போயுள்ள போதைவஸ்துப் பாவனையானது, உழைப்பற்ற சமூகத்தையும்,வாள் வெட்டுக்கள், வன்முறைக் கலாசாரங்களைப் பிறப்பிக்கும் உற்பத்திச் சாலையாக எமது பிரதேசங்கள் மாறிக் கொண்டிருக்கின்றதா? கண்களுக்குத் தெரியாமல் எமது சமூகத்தை ஆட்கொண்டுள்ள போதைவஸ்துப் பாவனைக்கு எதிராக ஒன்றிணைந்த செயற்பாடுகள் மூலம், (தொடர்ச்சி 7ம் பக்.)'




**உண்மையை உரக்கச் சொல்வோம்...**

# எழுச்சி

தொலைபேசி இல.: 0772576536
மின்னஞ்சல் முகவரி: ezhuchi295@gmail.com

## "எழுச்சி"

தமிழர்களின் அரசியல், கலை, கலாசார, வாழ்விட, மரபியல் ரீதியான விடயங்களைப் பேணிப் பாதுகாக்கின்ற ஊடகமொன்றின் தேவை உணரப்பட்டே "எழுச்சி" பத்திரிகையானது வெளிவருகின்றது.

தமிழர் தாயகத்தில் ஏற்கனவே பல பத்திரிகைகளின் வரவும், தாரகமந்திரமான கொள்கையும், பக்கம் சாராமை, நடுநிலைமை என்று கூறிக்கொள்கின்ற சூழலில் "எழுச்சி" பத்திரிகை தனது கொள்கையாக **"உண்மையின் முன் நடுநிலைமை"** என்ற கருத்து இருக்கமுடியாது என்ற நோக்கோடு, தமிழர்களின் வாழ்வியல் விடயங்களைப் பற்றிப் பேசுகின்ற பத்திரிகையாக, தமிழர்களின் பலமாக களம் காண வருகின்றது.

அரசியல் அநாதைகளாக, ஏதிலிகளாக, இலங்கைத்தீவினுள் வாழுகின்ற எம்மக்களின் அவலங்களை வைத்து, அரசியல் செய்கின்ற தனிநபர்களையும், கட்சிகளையும், அந்நிய சக்திகளையும் தோலுரித்து, புடம்போட்டுக் காட்டுவதே எமது கடமை மட்டுமன்றி - அவ்விடயத்தில் மிகவும் இறுக்கமாகச் செயற்படுவதோடு, எமது மக்களைப் பகடைக்காய்களாக யாரும் பயன்படுத்தாத சூழலை உண்டுபண்ணவும் உறுதிபூண்டுள்ளது.

இலங்கையில் வாழுகின்ற தமிழர்கள் இழப்பதற்கு உயிரைத்தவிர எதுவுமில்லாத வாழ்வை வாழுகின்ற இச்சூழலில் - அந்த உயிரையும் தமது அற்பசொற்ப சுகபோகங்களுக்காக , அரசியல் வறுமைக்காக, அடகு வைக்க முற்படுவதையும் - புலம்பெயர் தேசங்களில் எமது மக்களின் அவலங்களை வைத்துப் பணம் சம்பாதிப்பதையும், ஏதிலிகளான எமது மக்களின் உயிரையும் விட்டுவிடுங்கள் என்ற சிந்தனையுடன் செயற்படுபவர்களின் விடயத்தில் விழிப்போடு இருந்து, சரியான அரசியல் இலக்கு நோக்கி, எமது மக்களுக்கான எதிர்கால அரசியலை திடமாக முன்னெடுத்துச் செல்ல அல்லது வழிகாட்ட வாஞ்சையாக இருக்கிறது.

அத்தோடு நின்றுவிடாது, விடுதலைப் போரில் உயிர்நீத்த அத்தனை மக்களினதும், போராளிகளினதும் தியாகங்களை வலுவானதொரு சூழலை நோக்கி நகர்த்துவதோடு - களமாடிய முன்னாள் அனைத்து இயக்கப் போராளிகளின், அங்கவீனர்களின் உளவியல் ரீதியான பாதிப்புக்களைக் களைவதோடு - சம அந்தஸ்துள்ள பிரஜைகளாக அப்போராளிகளையும், மக்களையும் வாழவைப்பது எமது நோக்கமாக இருப்பதோடு - தன்னிறைவுப் பொருளாதாரத்தை நோக்கி, நிறைவானதொரு வாழ்வைக்காண, அனைத்து மக்களுடனும் ஒன்றிணைந்து, அரசியல் புரட்சி ஊடாக எழுச்சி காண்பதே திண்ணம்!

– ஆசிரியர்.

# மாவீரன் சே குவேரா வாழ்வும்! மரணமும்!



**" விடுதலைக்கான உந்துசக்தியாக, ஒடுக்கப்படுகின்ற மக்களின் கலங்கரை விளக்காக, போராடிக் கொண்டிருக்கும் இனங்களின் - இளைஞர்களின் கனவு நாயகனாக இருப்பவர் மாவீரன் சே குவேரா"**

பாகம் 01

### ஆர்ஜென்டீனா: குழந்தைப் பருவமும், இளமைப் பருவமும், ஆஸ்த்மா

மாபெரும் தேக்கநிலைக்கு முந்தைய ஆர்ஜென்டீனா, பிறப்பதற்கும் வளர்வதற்கும் மோசமான நாடு அல்ல ஆர்ஜென்டீனா. குறிப்பாக, எர்னஸ்டோ குவேரா லிஞ்சமற்றும் சேலியா டி லா ஸெர்னா ஒய் லோசா தம்பதிகளின் முதல் மகனாக மேட்டுக்குடியில் பிறந்த ஒருவருக்கு இது மோசமான நாடல்ல. ஒரு கோடியே இருபத்தைந்து இலட்சம் மக்களைக் கொண்ட நாட்டின் மூன்றாவது பெரிய நகரமான ரொஸாரியோவில் 1928 ஆம் ஆண்டு ஆனி மாதம் 14ஆம் திகதி எர்னஸ்டோ குவேரா டி லா ஸெர்னா பிறந்தார். அவருடைய தந்தையான குவேரா லிஞ்சின் குடும்பத்தினர் பன்னிரெண்டு தலைமுறைகளாக ஆர்ஜென்டீனாவில் வாழ்ந்து வந்தனர். "பன்னிரண்டு தலைமுறைகள்" என்பது மிகச் சமீபகாலத்தில் கரையேறிய குடியேறிகளையே பெரும்பாலும் கொண்டிருந்த கடவுளின் தெற்கு இராஜ்ஜியம் என்று அழைக்கப்பட்ட ஆர்ஜென்டீனாவில், ஒரு குடும்பம் மேட்டுக்குடியினராவதற்குத் தேவைப்படும் காலத்தைவிட அதிகமானதுதான். அவருடைய தாயைப் பொறுத்தவரையிலும், அவரும் நீண்ட, தனித்தன்மை கொண்ட செல்வச் செழிப்புமிக்க குடும்ப மரபில் வந்தவர்.

எர்னெஸ்டோ தனது தந்தையின் வழியில் ஐரிஸ் மற்றும் ஸ்பானிய மரபில் வந்தவர். அவருடைய கொள்ளுத்தாத்தாவான பாட்ரிக் லிஞ்ச் இங்கிலாந்திலிருந்து ஸ்பெயினுக்குச் சென்றார். 18 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் ரியோ டி லா பிளாட்டாவின் ஆளுனர் பொறுப்பை ஏற்பதற்காக ஆர்ஜென்டீனாவுக்குச் சென்றார். சே மெக்ஸிக்க அமெரிக்க மரபில் வந்தவர் என்றும் கூறமுடியும். சேவின் தந்தைவழிப் பாட்டி அனா லிஞ்ச் 1868ஆம் ஆண்டு கலிபோர்னியாவில் பிறந்தார். சேவின் தந்தைவழித் தாத்தாவான ராபர்ட்டோ குவேராவும் அமெரிக்காவிலிருந்து தற்செயலாகவே வந்தவர்தான். என்ற பொழுதிலும்: அவருடைய முன்னோர்கள் 1848ஆம் ஆண்டு கலிபோர்னியாவில் தங்கம் தேடுவதில் ஈடுபட்டு, தங்களுடைய பிறந்த நாட்டிற்குத் திரும்பினார்கள்.

பிறப்பின்பாற்பட்டு மட்டும் குவேராக்கள் பழைய ஆர்ஜென்டீனர்களாக இருக்கவில்லை. அவருடைய குடும்பத்தின் குவேரா லிஞ்ச் பிரிவு உள்நாட்டு மேட்டுக்குடியினரின் வரலாற்றுடன் தன்னை நெருக்கமாக அடையாளப்படுத்திக்கொண்டது. நாட்டின் பெரும் நில உடைமையாளர்களின் அமைப்பாகவிருந்த "ஆர்ஜென்டீன கிராமப்புறச் சங்கம்" என்ற அமைப்பை 19ஆம் நூற்றாண்டில் நிறுவியவர்களில் கஸ்பார் லிஞ்சும் ஒருவர்.

19ஆம் நூற்றாண்டின் இறுதியில் பெரும் நில உடைமையாளர்களின் அமைப்பில் முக்கியமான ஒருவராக என்ரிக் லிஞ்ச் இருந்தார் என்றால், சே அறிந்த ஒரே பாட்டியான அனா லிஞ்ச் ஒரு தாராளவாதியாகவும், பகுத்தறிவு வாதியாகவும் இருந்தார். சேவின் இளமைப் பருவத்தில் முக்கியமான தாக்கத்தை ஏற்படுத்தியவராக அவர் விளங்கினார்: அவர் பொறியியலுக்குப் பதிலாக மருத்துவம் பயில்வது என்று முடிவு செய்வதற்கு அவருடைய பாட்டியின்உடல்நலக்குறைவும் மரண மும் ஒரு காரணமாகும்.

குவேராவின் தாயாரின் நில உடைமையின் வேர்கள் பெருவின் கடைசி ஸ்பானிய வைஸ்ராயான ஜெனரல் டி லா ஸெர்னா ஹினோ ஜோஸா வரையில் செல்கின்றன. தென்னமரிக்காவின் விடுதலையை இறுதியாக உறுதிப்படுத்திய 1820 ஆம் ஆண்டு அயாகுச் சோவில் நடைபெற்ற வரலாற்றுப் புகழ்மிக்க போரில் இவருடைய படைகள் சுக்ரேவால் தோற்கடிக்கப்பட்டன. யுவான் மாட்டின் டி லா ஸெர்னா எடல்மிரா லோஸாவின் மகளான செலியா, முன்னாள் இளம் கட்டிடக் கலைஞரைத் திருமணம் செய்துகொண்ட 1927 ஆம் ஆண்டில் அவருக்கு 21 வயதுகூட பூர்த்தியாகி இருக்கவில்லை. அவருடைய பெற்றோர்கள் அதற்குப் பல ஆண்டுகளுக்கு முன்பே இறந்து விட்டார்கள். அவர்களுடைய பேத்திகளில் ஒருவருடைய கூற்றுப்படி செலியா பிறந்த சிறிது காலத்திலேயே டான் யுவான் தனக்கு மேகநோய் இருப்பதை அறிந்து, கடலில் விழுந்து தற்கொலை செய்துகொண்டார். விரைவிலேயே எடல்மிராவும் இறந்துவிட்டார். 1928 ஆம் ஆண்டு கம்யூனிஸ்ட் கவிஞர் காயடானோ கோர்டோவா இடுர் புருவை மணந்துகொண்ட தனது மூத்த சகோதரியான கார்மன் டி லா ஸெர்னாவால்தான் செலியா வளர்க்கப்பட்டார். அந்தத் தம்பதிகள் இருவரும் ஆர்ஜன்டீனா கம்யூனிஸ்ட் கட்சியின் அதிகார பூர்வமான உறுப்பினர்களாக இருந்தார்கள். கம்யூனிஸ்ட் கட்சி மீதான அவர்களின் ஈடுபாடு 14 ஆண்டுகள் நீடித்தது.



சே குவேரா:
வாழ்வும் மரணமும் புத்தகத்திலிருந்து...
நன்றி: ஜோர்ஜ் ஜி.காஸ்டநாடா

செலியாவின் கணவர் கூச்சமின்றி குறிப்பிட்டதைப்போல, செலியாவின் குடும்பத்திடம் "ஏராளமான பணம் இருந்தது". அவருடைய தந்தை "மிகப்பெரும் சொத்தையும், கால்நடை வளர்ப்புப் பண்ணைகளைக் கொண்ட பெரும் நிலங்களையும்" சொத்தாகப் பெற்றார். "பண்பட்ட, கூருணர்வு மிக்க மனிதரான அவர் முற்போக்குக் கட்சியில் செயலூக்கத்துடன் பணியாற்றினார்." "1890ஆம் ஆண்டு புரட்சியில்" பங்கெடுத்துக்கொண்டார்.

குடும்பச் சொத்து ஏழு குழந்தைகளுக்கு இடையில் பங்கிடப்பட்ட போதிலும், தொடக்கத்தில் அது அனைவருக்கும் தேவைக்கு அதிகமாகவே இருந்தது. குவேரா டி லா செலியாவின் தந்தையால் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட தோல்வியடைந்த தொழில் முயற்சிகளிலிருந்து பெரிய அளவில் வருமானம் எதுவும் இல்லை.


(தொடரும்....)






தமிழர்களின் அரசியல் முடிவெடுக்கும் அதிகாரமையம் என்பது, இலங்கைத்தீவினுள் ஊசலாடும் தன்மையையொத்த அரசியலையையும், ஸ்திரத் தன்மையற்ற போக்கையும், ஆளுமை மிக்க தலைமையை ஏதோவொரு அடையமுடியாத இலக்கு நோக்கித் தொலைத்த இனமாக நிகழ்கால தீர்மானிக்கின்ற சக்திகளாக புலம்பெயர் தமிழர்கள் இருக்கின்றபொழுதிலும், பன்முகப்படுத்தப்பட்ட அல்லது இன்னும் தெளிவாகக் கூறுவோமாயின், பல அரசியல் கொள்கைகளுக்குள் சிதறியுள்ள தமிழ் இனமானது.

# தமிழர்களின் அரசியல் ஸ்திரத்தன்மை மாயைக்குள் சிக்குண்டு சிதைந்து போயுள்ளதா?





சாணக்கியன்.

அரசியலை சீரழித்துக் கொண்டிருக்கும் ஓர் பாவப்பட்ட இனமாக தமிழர்கள் இலங்கைத் தீவில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

தமது சுதந்திரத்தை நிலைநாட்டி, உரிமைகளைப்பேணி, சமத்துவத்துடனும், பொருளாதார வசதியுடனும், பண்பாட்டுச் சிறப்புடனும் அனைத்துத் தமிழர்களும் வாழ்வதற்காக வழிசெய்வதே அவர்களின் அரசியல் கருத்தியல் இலக்காக இருக்கின்றபொழுதிலும், பன்முகப்படுத்தப்பட்ட அரசியலும், மாயையாகச் செல்வாக்குச் செலுத்துகின்ற அதிகார மையங்களும் தமிழர்களின் ஸ்திரமான அரசியலைச் சிதைத்து, அவர்கள் அடுத்த கட்டத்தை நோக்கி, ஓர் உறுதிமிக்க இனமாக நகர்வதை தடுத்து நிற்கின்றன.

தமிழர்களின் அரசியலானது, ஒரே அரசியல் அலகின் கீழ் அல்லது இலக்கின் கீழ் செயற்பட்டிருக்கவில்லை என்பது வரலாறாக அமையும் பொழுது, தமது இருப்புக்களைத் தக்கவைப்பதும், பாதுகாத்துக் கொள்வதும், அதனூடாக இழந்தவைகளில் இருந்து, உறுதிமிக்க தொரு அரசியலைக் கட்டியமைப்பது தொடர்பாக தமிழர்கள் இன்னும் ஆலோசிக்கவில்லை என்பது கவலை யானதொரு விடயமாகவே இருக்கின்றது.

இலங்கைத் தீவில் தமிழர்களின் அரசியலை பொது முடிவுகளில் ஒரு இணக்கப்பாட்டை எட்டும் ஓர் இனமாகத் தம்மை இன்னும் நிலைநிறுத்திக்கொள்ளாத அரசியல் பண்பாட்டுடன் வாழ்பவர்கள் என்றே குறிப்பிடத்தோன்றுகிறது.

எவ்வாறு இருப்பினும் - மேலோங்கிய தேசிய எழுச்சியின் ஊடாக அதிகார மையங்களை நோக்கி நகர்த்தப்பட்ட தமிழினத் தலைவர்கள், ஓர் இனம் சார்ந்து, அந்த இனங்களின் குறை நிறைகளைக் களைந்துகொண்டு, ஓர் வலுவான அரசியல் மையத்தை நோக்கி ஒற்றுமையுடன் வழிநடத்தும் பொறுப்புக்களிலிருந்து, உட்கட்சி மோதல்களாலும், தலைமைத்துவப் போட்டிகளாலும், அதிகாரப் போதையிலும் இனம் சார்ந்த முடிவுகளில் தோற்றுப்போனவர்களாகவே இன்று வெளிப்பட்டு நிற்கின்றார்கள்.


ஈழத்தமிழர்களின் விடுதலைப் போராட்டத்தை ஆதரித்து அரசியல் செய்த சக்திகளின் அனைத்து அதிகார ரீதியான செயற்பாடுகளும் அதாவது, பிரதேசசபைச் செயற்பாடுகளாக இருக்கட்டும், மாநகரசபைச் செயற்பாடுகளாக இருக்கட்டும், மாகாணசபைச் செயற்பாடுகளாக இருக்கட்டும், ஏன் பாராளுமன்றச் செயற்பாடுகளாக்கூட இருக்கட்டும், இவையாவுமே ஈழத்தமிழர்களின் விடுதலைப் போராட்டத்தை ஆதரித்து அரசியல்

> “ இனம் சார்ந்தும், மொழி சார்ந்தும் இலங்கைத் தீவினுள் வாழ எத்தனிக்கும் தமிழ் சமூகமானது, பன் முகப்படுத்தப்பட்ட அரசியலில் பொது முடிவுகள் சார்ந்து, தமது அரசியல் முடிவுகளை எடுக்க வேண்டிய கட்டாயமும், தமது சுதந்திரத்தையும், உரிமையையும், சமத்துவமான அரசியலையும் உண்டுபண்ணக் கூடிய சரியானதொரு மாற்றுத் தலைமையை இனங்காண வேண்டிய கடைசி சந்தர்ப்பமாக தமிழர்களினுடைய அரசியல், அரசியல் எல்லை என்னும் அந்தப் புள்ளியில் வந்து நிற்கின்றது. ”

செய்த சக்திகளினால் இந்த 11 ஆண்டுகளில் தோல்வியையே தழுவியுள்ளன.

ஈழத்தமிழர்களால் நடாத்தப்பட்ட ஆயுதப்போராட்டம் முள்ளிவாய்க்காலில் முற்றுப்பெற்ற பின்னர், அரசியல் ரீதியாக முன்னெடுக்கப்பட்ட போராட்டமானது, சர்வதேச நாடுகளின் ஒத்துழைப்புடன் ஓர் உறுதிமிக்க அரசியல் தீர்வைத் தமிழர்களுக்கு பெற்றுத்தரும் என்ற எதிர்பார்ப்புக்களிலும், தமது வாக்குப்பலத்தால், பாராளுமன்றத்திற்கு அனுப்பப்பட்டவர்கள் நடந்துமுடிந்த யுத்தத்தில் தமிழர்கள் பக்கமுள்ள நியாயங்களையும், உயிரிழப்புக்களையும், ஐ.நா சாசனத்திற்கு முரணாக நடைபெற்ற போரில், கிடைத்த அனுகூலங்களையும் பலமாக வைத்து, நல்லாட்சி என்று அழைக்கப்பட்ட தமிழர்களின் தலைமை பலமாகவும், கிட்டத்தட்ட தமிழர்களாலேயே நடத்தப்பட்ட அரசாங்கமாகவும், அதேவேளையில் எதிர்க்கட்சித் தலைமையாகவும் இருந்த மாபெரும் அரசியல் பலத்தை தமிழ்த் தலைமைகள் என்று சொல்லப்படும் தலைமைகள், தமது சுயலாப அரசியலுக்காக தமிழர்களின் ஸ்திரத்தன்மையை அடகு வைத்துவிட்டு, ஆயுதப்போராட்டம் போன்று அரசியல் போராட்டத்தையும் தோற்கடித்துள்ளதாகவே எண்ணத் தோன்றுகின்றது.

ஆகவே, இனம் சார்ந்தும், மொழி சார்ந்தும் இலங்கைத்தீவினுள் வாழ எத்தனிக்கும் தமிழ்ச் சமூகமானது, பன்முகப்படுத்தப்பட்ட அரசியலில் பொது முடிவுகள் சார்ந்து, தமது அரசியல் முடிவுகளை எடுக்கவேண்டிய கட்டாயமும், தமது சுதந்திரத்தையும், உரிமையையும், சமத்துவமான அரசியலையும் உண்டுபண்ணக்கூடிய சரியானதொரு மாற்றுத் தலைமையை இனங்காண வேண்டிய கடைசி சந்தர்ப்பமாகத் தமிழர்களினுடைய அரசியல், அரசியல் எல்லை என்னும் அந்தப் புள்ளியில் வந்து நிற்கின்றது.






தமிழ்நாட்டையே தனது புஸ்பா என்ற பாத்திரம் மூலம் இளசுகளை கட்டிப்போட்டவர் நடிகை ரேஷ்மா. இவர் "மசாலா படம்" என்ற திரைப்படம் மூலமாக தமிழ் சினிமாவிற்கு அறிமுகமானார். இவர் தமிழ், மலையாளம் ஆகிய மொழிகளில் நடித்துள்ளார்.

இவர் சினிமாவுக்கு வருமுன் தொகுப்பாளராகவும் பல தொலைக்காட்சிகளில் பணியாற்றியுள்ளார். அதன் மூலமாகவே சினிமாவில் வாய்ப்புக் கிடைத்ததாகக் கூறியுள்ளார். கடந்த வருடம் ஒப்பந்தம் செய்யப்பட்ட 'போடா முண்டம்', *'My Perfect Husband'* ஆகிய படங்கள் வெளிவரக் காத்துக்கொண்டிருக்கின்றன. கலர்ஸ் தொலைக்கட்சியில் உயிரே என்ற தொடரில் நடித்து வருகிறார்.

பட வாய்ப்புக்களுக்காக அடிக்கடி சமூக வலைத்தளங்களில் புகைப்படம் வெளியிட்டு வருவதை வாடிக்கையாகக் கொண்டுள்ளார்.





# தளபதி விஜய் சாதனை!

**தளபதி விஜய் 117.9 மில்லியன்**
**ராகவா லாரன்ஸ் – 76.2 மில்லியன்**
**அஷய்குமார் – 58.8 மில்லியன்**

கடந்த சில மாதங்களாக கொரோனா வைரஸ் தொற்றுக் காரணமாக ஊரடங்குச்சட்டம் பிறப்பிக்கப்பட்டு மக்கள் அனைவரும் வீட்டிலேயே முடங்கியுள்ளனர்.

இதனால் தொலைக்காட்சியைப் பார்ப்பவர்களின் எண்ணிக்கை சற்றுக் கூடுதலாகவுள்ளது என்றே கூறலாம்.

மேலும் இதனைக் கருத்திற்கொண்டு பிரபல தொலைக்காட்சிகளில் முன்னணி நடிகர்களின் படங் களையே தொடர்ந்தும் ஒளிபரப்பி வருகின்றனர்.

அந்தவகையில், இந்த சமயத்தில் ஒளிபரப்பப்பட்ட திரைப்படங்களில் அதிக பார்வையாளர்களைப் பெற்ற முன்னணி இந்திய நட்சத்திரங்களின் பட்டியலில் தள-பதி விஜய் 117.9 மில்லியன், ராகவா லாரன்ஸ் 76.2 மில்லியன், அஷய்குமார் 58.8 மில்லியன் என மக்கள் பார்த்து ரசித்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.



விஜய் தொலைக்காட்சியில் ஒளிபரப்பான 'கடைக் குட்டி சிங்கம்' என்ற நாடகத்தின் மூலம் சின்னத்திரை நடிகை யாக அறிமுகமானவர் நடிகை ஷிவானி நாராயணன். அதன்பின் விஜய் தொலைக்காட்சியிலிருந்து வெளியேறி ஜீ தமிழ் தொலைக்காட்சியில் அறிமுகமானார்.

அதில் தற்போது ' ரெட்டை ரோஜா' சீரியலில் இரட்டை வேடத்தில் நடித்து தமிழக இல்லத்தரசிகளின் மனதில்



# புதிய ஹீரோயின்

குடிபுகுந்துவிட்டார். தற்போது கொரோனா வைரஸினால் ஏற்பட்ட ஊரடங்கின் நிமித்தம் வீட்டிலேயே இருக்கும் இவர் - டான்ஸ், டிக்டாக், கொரோனா விழிப்புணர்வு, வீட்டைச் சுத்தம் செய்தல் உள்ளிட்டவற்றை வீடியோவாக எடுத்து தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் வெளியிட்டு வருகின்றார். இந்நிலையில் ஹீரோயின் ஆவதற்கு எல்லாத் தகுதியும் உள்ள ஷிவானி தான் சின்னத்திரையில் நடித்து ஹீரோயினாகப் போகும் அடுத்த நபர் எனத் தமிழ் சினிமாவில் பேச்சாக உள்ளது.



# முடிவுக்குள் பாலா - பாரதிராஜா பிரச்சினை!

இயக்குநர் பாலா மற்றும் பாரதிராஜா ஆகிய இருவருக்கும் "குற்றப்பரம்பரை" என்ற படத்தை இயக்குவது தொடர்பாக கடந்த சில ஆண்டுகளுக்கு முன்னர் பிரச்சினை உருவானது.

பாரதிராஜா தன்னுடைய கதாசிரியர்களில் ஒருவரான ரத்னகுமார் எழுதிய குற்றப்பரம்பரை எனும் கதையை இருபது வருடங்களுக்கு மேலாக எடுக்க வேண்டும் என முயற்சி செய்தும் அது பலிக்கவில்லை. ஆனால் அதை தன்னுடைய கனவுப்படைப்பு எனக் கூறிவந்தார். இந்நிலையில் சில ஆண்டுகளுக்கு முன்னர் எழுத்தாளர் வேல் ராமமூர்த்தி எழுதிய "குற்றப்பரம்பரை" நாவலை படமாக எடுக்க இயக்குனர் பாலா ஆயத்தமானார். இதையறிந்த பாரதிராஜா ஏற்கனவே தான் எடுப்பதாக இருந்த படத்தை பாலா எடுக்க முற்பட்டது அவருக்கு கோபத்தை ஏற்படுத்தியது.

இதனால் பாலாவைத் திட்டிப் பேட்டி கொடுக்க, பாலாவும் பத்திகையாளர் சந்திப்பை வைத்து பாரதி ராஜாவை வறுத்தெடுத்தார். இதனால் தமிழ் சினிமாவே பரபரப்பானது. ஆனால், இருதரப்புமே அந்தப்படத்தை இன்னும் தொடங்கவேயில்லை. இந்நிலையில் இப்போது பாரதிராஜாவுக்கு, இந்திய சினிமாவின் மிக உயரிய விருதான "தாதா சாகேப் பால்கே" விருது வழங்கவேண்டும் எனத் தமிழ் சினிமாவில் தேசிய விருது வாங்கிய கலைஞர்கள் ஒரு கையெழுத்து இயக்கத்தை உருவாக்கியுள்ளனர்.

அதில் பாலாவும் கையெழுத்திட்டுள்ளார். இதனால் இருதரப்பும் நடந்த பிரச்சினைகளை மறந்து சமாதானமாகிவிட்டதாகப் பேசப்படுகிறது.



# கப்டன் கூல் தோனி?

இந்தியாவில் மட்டுமன்றி சர்வதேச அளவிலும் இந்திய அணி யின் முன்னாள் கப்டன் எம்.எஸ்

தோனிக்கு அதிகளவிலான ரசிகர்கள் காணப்படுகின்றனர். அவரது பொறுமை, போட்டிகளின்போது நெருக்கடிகளை அவர் சமாளிக்கும் விதம் என்பன அவருக்கு ஏராளமான ரசிகர்களைப் பெற்றுத்தந்துள்ளது. மேலும் "கப்டன் கூல்" என்ற பெயரையும் கொடுத்துள்ளது.




ICC WORLD TWENTY20

T 20 உலக கோப்பைத் தொடர் அடுத்த ஆண்டுக்கு தள்ளிவைக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் இந்த ஆண்டு நடைபெறவிருந்த T 20 உலகக் கோப்பை தொடரில் இடம்பெறுவார் என்று எதிர்பார்க்கப்பட்ட எம்.எஸ். தோனியின் வாய்ப்பு தற்போது கேள்விக்குறியாகியுள்ளது. இது ரசிகர்களிடையே பெரும் ஏமாற்றத்தை உண்டுபண்ணியுள்ளது.

The SPORTS

T 20 உலகக் கோப்பை 2021 ஆம் ஆண்டிற்கு ஒத்திவைக்கப்பட்டநிலையில் லசித் மலிங்காவை மீண்டும் ஒரு உலகக் கோப்பை நிகழ்வில் விளையாடுவதை பார்க்க முடியுமா என்று கிரிக்கெட் ரசிகர்களிடையே கேள்வி எழுந்துள்ளது.

107 விக்கெட்டுகளுடன் T 20 போட்டிகளில் அதிக விக்கெட் எடுத்த வீரர்கள் பட்டியலில் முதலிடத்தில் இருக்கும் மலிங்க, 2020 உலகக் கோப்பைக்குப் பிறகு ஓய்வுபெறுவதாக முன்னர் அறிவித்திருந்தார்.

# சமூக ஊடகங்களில் இனவெறி



இங்கிலாந்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள மேற்கிந்திய கிரிக்கெட் அணி 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடி வருகிறது மேற்கிந்தியவுக்கு எதிரான 2வது டெஸ்ட் போட்டி நடைபெறுவதற்கு முன் மருத்துவப் பாதுகாப்பு விதிகளை மீறிய குற்றத்திற்காக இங்கிலாந்து வேகப்பந்து வீச்சாளர் ஜோப்ரா ஆர்ச்சரை இங்கிலாந்து மற்றும் வேல்ஸ் கிரிக்கெட் வாரியம் போட்டியில் இருந்து நீக்கியது.

இதனைத் தொடர்ந்து ஆர்ச்சர் 5 நாட்கள் தனிமைப்படுத்துதலில் வைக்கப்பட்டார். இந்நிலையில் பாதுகாப்பு விதிமீறலால் தன்மீது சமூக

## இங்கிலாந்து அணியின் வேகப்பந்து வீச்சாளர் ஆர்ச்சர்

ஊடகங்களில் இனவெறி துஷ்பிரயோகம் செய்யும் வகையில் விமர்சனங்கள் வந்ததாக ஆர்ச்சர் கூறியுள்ளார்.

ஒவ்வொருமுறை விளையாடும்பொழுதும் 100 சதவீத முழுத்திறைமையை வெளிப்படுத்தும் வகையில் விளையாடுவேன். ஆனால் அதற்கு உத்தரவாதம் அளிக்கமுடியாத நிலையில் நான் விளையாட விரும்பவில்லை. நடந்தவை நடந்தவைகளாகவே இருக்கட்டும். இதுபற்றி இங்கிலாந்து மற்றும் வேல்ஸ் கிரிக்கெட் வாரியத்திடம் நான் புகார் அளித்துள்ளேன் எனக் கூறியுள்ளார்.



இத்தாலியில் நடந்துவரும் சீரி ஏ கிளப் கால்பந்து போட்டியில் நடந்த ஒரு வீக் ஆட்டத்தில் யுவென்டஸ் அணி 2:1 என்ற கோல் கணக்கில் வாஜலோலை வீழ்த்தியது. யுவென்டஸ் அணியில் இரண்டு கோல்களையும் 51 மற்றும் 54 ஆவது நிமிடங்களில் நட்சத்திர வீரர் கிறிஸ்டியானோ ரொனால்டோ அடித்தார். இதுவரை 34 ஆட்டங்களில் ஆடியுள்ள யுவென்டஸ் அணி 25 வெற்றி, 5 சமநிலை என்று 80 புள்ளிகளுடன் முதலிடத்தில் உள்ளது. சீரி ஏ போட்டியில் ரொனால்டோ ஒட்டுமொத்தமாக இதுவரை 51 கோல்கள் (61ஆட்டம்) அடித்துள்ளார். இதன்மூலம் சீரி ஏ விகா, இங்கிலாந்து பிரிமியர் வீக் ஆகிய மூன்று போட்டிகளில் குறைந்தது 50 கோல்கள் அடித்த முதல் வீரர் என்ற சாதனையை போர்ச்சுகலையைச் சேர்ந்த ரொனால்டோ படைத்தார்.



# ரொனால்டோ சாதனை!




# கந்தகப்பூச் சூடியவள்



சத்யா நீங்கள் முகவரி தந்த அந்தக் கணங்களும், முல்லை மண்ணின் தென்றல் தழுவிய அந்த நிசப்தமான அந்த முகவரியில் உங்கள் வெப்ப மூச்சுக் காற்று தென்றலையும் மீறி, என் மேனி சுட்டதையும், தனிமையாக இருந்து கழிக்கின்றேன்.

காலங்கள் கடந்தோடி விட்டது. காதல் இலக்கியங்களில் போருக்குச் செல்லும் கணாளனின் கதை பாத்திரத்தில் மங்கையவளின் மனவேதனையை இலக்கியங்களில் படித்ததுண்டு. ஆனாலும் இன்று என் உடலும் உள்ளமும் அந்த வேதனை யால் வாடுகின்றது.

காத்திருந்த தருணங்கள், பார்த்திருந்த வழிகள் எல்லாம் நேற்று வரை ஏமாற்றமே. போர்க்களம் சென்ற உங்கள் கடைசிப் புன்னகை வழியனுப்பி வைத்த வாசல் பார்க்கும் போதெல்லாம் வாள் கொண்டு ஊடுருவுகிறது.

கன்னியொருத்தி தன் காதலில் ஜெயிப்பது என்பதும், ஜெயித்த அந்தக் காதல், திருமண செய்தியை, அறிவிக்கும் அந்தக் கணங்களில் மகிழ்ச்சி காணத் துடிக்கும் மனதை, அந்தப் பெண்ணைத் தவிர யாரும் அறிந்திருக்க வாய்ப்பதில்லை.

கடைசியாக இருட்டுக்கள் ஆக்கிரமித்த எங்கள் மண்ணில், ஆயுதங்களுடன் என்னை இறுக அணைத்து, விடைபெற்றுச் சென்றதும், போர்க்களம் புகுந்து, வெற்றி வாகை யுடன் தளம் போய்ச் சேர்ந்ததும் செய்தியாகக் காத்திருக்கின்றேன் இன்றும் கனவுகளுடன்.

அந்த இறுக்கம், அந்த அணைப்பு, அந்த நெருக்கம் தேவையாக என் மனது உணருகிறது. போர்க்களம் புகுந்த நீங்கள் மறுபடியும் சீக்கிரமே வரவேண்டும் என்று மனது ஏங்கித் தவித்தாலும், நிஜவாழ்வில் அது நடப்பதற்கு வாய்ப்புகள் இல்லை என்றே தோன்றுகிறது.

என் அருகாமையில் இந்த அகிலத்தில் அன்பு செலுத்திய அத்தனை உள்ளங்களையும் மிஞ்சும் பாசத்தை உங்களுக்குத் தந்துவிட என்றும் உறுதியாக இருக்கின்றேன். இந்தத் தனிமை வலிகள் எல்லாம் மறந்துவிடும் அளவிற்கு சத்யா உங்களை நான் ஆட்கொள்ள வேண்டும்.

கருகிய எனது உள்ளம் உங்கள் பாசமதால் பசும் சோலை யாக வேண்டும். காத்திருக்க, என் பொறுமைக்கு இனியும் எல்லையில்லை. நானும் போர்க்களம் புகும் நாள் தொலைவில் இல்லை.

தளிரின் தனிமையில் அவள் வரைந்த அந்த மடலை போர்க்களம் புகுந்தபின் இருவரும் அருகருகே அமர்ந்து கொண்டு, தனது உயிரிலும் மேலானவளால் வரையப்பட்ட அந்த மடலை அவள் மடியில் சாய்ந்து, அந்தக் கானகங்களின் சாட்சியாக கட்டியணைத்தபடி வாசித்து முடிக்கிறான் சத்யா.

நிசப்தம் கலைகிறது. இருட்டினைக் கிழித்துக் கொண்டு, வெளிச்சமாக குண்டுகள் கானகத்தின் மீது சொரிந்து கொண்டு இருக்கின்றன. "தளிர் விடை கொடு. கடமை அழைக்கிறது. கள மாட எம் தோழமைகள் தயாராக நானும் செல்ல வேண்டும்." தளிர் விடுவதாயில்லை. மறுக்கிறாள்!

ஏதோ கெட்ட கனவுகள் எல்லாம் தளிரை பாடாய்ப்படுத்துகிறது. அவனை இறுக அணைத்தபடி, தனது வதனமதை அவனின் மார்பிற்குள் புதைத்துக் கொண்டு அழும் கண்ணீர்த் துளிகள், அவனது மார்பில் விழுந்து நெருப்பாய் சுட்டெரிக்கின்றன.

இறுக்கத்தை விட்டுவிட இரு இதயங்களும் இடம்கொடுக்கவில்லை. நிமிடங்கள் கரைகின்றன. நிமிடங்கள் மாத்திரமல்ல, இருவர் உள்ளமும் உடலும், ஒருவர் ஒருவருள் கரைந்து கொள்கிறது. மணிகள் கடந்த பின், விடைபெற்றுச் செல்லும் சத்யாவை ஓடிச்சென்று மறுபடியும் அணைத்துக் கொள்கிறாள் தளிர்.

காதலில் பிரிவு என்பதும், அந்தக் கொடிய வலியை உணர்ந்து கொள்வது என்பதும் மிகவும் கொடுமையானது. தளிரின் கண்கள் அருகாமையிலேயே, அந்த இருளில் அவளைத் தொலைத்துக் கொண்டு விடைபெற்றான் சத்யா.

வேட்டோசைகளும், குண்டுகளின் பாரிய வெடிப்புக்களும் தளிரின் மனதில் தளர்வை உண்டுபண்ணு கின்றன. போர்க்களம் புகுந்த சத்யாவை பிரிய மனமில்லாதவளாக, அவளும் போர்க்களம் புக முடிவுசெய்கிறாள். பயிற்சி பெற்றவளாயிற்றே. காத்திருப்பாளா என்ன, களமாடத் துணிந்தவள் மறுகணம் யோசிக்க வில்லை. உக்கிர மோதலில் இருள் கலைந்து, கானகத்தில் உதயமாகும் சூரியனும் முகங்களைக் காட்சிப்படுத்தின.

தூரத்தில் சத்யா வருவதாக உணர்ந்த தளிர் ஓடுகிறாள். நெருக்கம் அண்மித்த பொழுது, அது சத்யா அல்ல. வேறொருவர் என்றதும், உடம்பின் பலம் எல்லாம் இழந்தவளாக "அண்ணே சத்யாவைக் கண்டீர்களா?" என்று கேட்டவளுக்கு விடையாக, இரண்டு மைல் தொலைவில் சத்யா தனது அணியுடன் இருப்பதாக பதிலளித்தார் அவர்.

ஓடுகிறாள். இரண்டு மைல்கள் என்ன, இருநூறு மைல்களும் அவனுக்காக ஓட உள்ளமும் உடலும் தயாராக இருந்தது. யுத்தம் மேலும் உக்கிரம் அடைகிறது. தளிர் எதிரிகளைக் களங்காணவும் தயங்கவில்லை. சண்டையிட்டுக்கொண்டே, சத்யாவின் இலக்கு நோக்கி நகருகிறாள் தளிர். ஆனாலும், இடம்கொடுக்காத துப்பாக்கி ரவைகளின் வேட்டுக்கள் இன்னுமின்னும் யுத்தத்தின் கடுமையை உணர்த்தி நின்றன.

இரண்டு மைல்கள் தொலைவான தூரம், யுத்தத்தால் - இருபது மைல்களைக் கடப்பது போன்ற பாரியதொரு இடைவெளியைக் கொடுத்திருந்தது. களமாடுகிறாள்! அவளின் இலக்கு என்பது உறுதி யானது. அவ்வாறு களமாடிய இருவரும் சந்தித்துக் கொள்கிறார்கள். ஓடிவந்து இறுக அணைத்த தளிரை அந்தத் தருணமதில்கூட, கவிதையாய் விழிக்கிறான் சத்யா.

களமாடிய தளிரின் கூந்தலில் கந்தகங்களின் துகள்கள் கொட்டிக் கிடந்தன.

கட்டியணைத்து இரு கைகளால் கூந்தலை வருடி முத்தமிட்டவன் "கந்தகப் பூச்சூடியவளே! காதலனுக்காய் போர்க்களம் புகுந்தவளே! மாளாது எம் வீரம்! மடியாது எம் மண் எதிரியிடம்! வெற்றியோடு மணம் முடிக்கும் நாள் வெகுதொலைவில் இல்லை." என்று வதனம் தழுவி, ஆயுதங்களுடன் அவளையும் அணைத்து, இரும்புப் பிடியாய் அவள் நெற்றியிலே முத்தமிட்டு, வருகிறேன் என்று சென்றவன், யுத்தம் முடிந்தும் வரவேயில்லை.

வீர மரணம் தழுவிய செய்தி மட்டுமே அவள் செவிகளில் வந்து இரும்பைக் காய்ச்சி ஊற்றியது போல் இருந்தது. பத்து வருடங்களின் பின் அவன் வீழ்ந்த அந்த மண்ணை மிதிக்கும் பாக்கியம் தளிருக்குக் கிடைத்தது. அந்த மண்ணை அள்ளி, அவள் இதயத்தோடு ஒற்றிக்கொள்ள அவளுக்கும் விருப்பம்தான். ஆனாலும், அவளும் அந்தக் கடைசிப் போர்க்களத்தில் இரண்டு கைகளையும் இழந்திருந்தாள். இருப்பினும், விழுந்து மண்ணை அவளது சத்யாவாக எண்ணி முத்தமிட்டுக் கொள்கிறாள்.

அகத்தியன்

## கடவுளின் கடவுச்சீட்டு

கடவுள்களின் கடவுச்சீட்டு
காணாமல் போய்விட்டதாம்
அதனால் தான்
இப்போதெல்லாம்
கடவுள் பூமிக்கு வருவதே இல்லை
பாவங்கள், வழக்குகள்,
நீதிகள்
குவிகின்றன
கடவுளின் கைபேசி
எண்கள் கூட
கிடைக்காமல் காத்திருக்கின்றோம்
நாங்களே
கடவுளின் கடவுச்சீட்டை
களவாடியது
கடைசியில்தான் புரிந்தது..

- நிந்தவூர் கமலா




அம்மா என ஒரு பிஞ்சு, பிரபஞ்சம் அழைக்கும் ஓசை - கேட்கவே தன் மூச்சை அடக்கி, மறு உலகு கண்டு, மீண்டுவரும் தாய்மையை வார்த்தைகளால் வர்ணிக்க முடியாது.

**"ஒரு பெண்மையின் பரிபூரணமே தாய்மை, தாய்மையின் மறு உருவமே தியாகம்"**

ஒரு பெண் தான் தாய் எனும் பொறுப்பை அடைந்துவிடின், தனது விருப்பு வெறுப்புகளுக்கு இடம்கொடுக்காது, தனது உலகையே தன் சேயிற்காக சேவகம் செய்வாள்!.. தாய்மை என்ற உணர்வினுள், உலகிலுள்ள அனைத்து பந்தபாசமும் ஒடுங்கிவிடும். வீட்டைவிட்டு வெளியிடங்களில் உணவருந்த அவளுக்கு மனம் இடம்கொடுக்கவே கொடுக்காது. காரணம், தன் மகளோ, மகனோ இந்த உணவை இக்கணம் உண்ணவில்லை எனும் ஏக்கம்! ஆனால், அதே உணவை தன்னவன் கணவன் வீட்டிற்கு எடுத்துவந்தால், "நான் இதை நிறைய சாப்பிட்டிருக்கிறேன், அதோடு என் வயிற்றில் பசியுமில்லை" என்று ஒருபிடியேனும் விரும்பாத அன்னபூரணி அவளே!

தன் உடன்பிறப்புக்களையும், தன் மணவாளனையும் குழந்தைபோல் கவனிக்கும் கண்ணியமான உறவினுள் ஐக்கியமாகிறது பெண்ணவளின் தாய்மை. இவ்வுலகில் எவ்வளவோ உறவுகள் தமக்கும் பாச உணர்வை வெளிக்காட்டினாலும், அவ்வனைத்து பாச வகைகளையும் பெண்ணவளின் தாய்மையிடம் தோற்றே போகின்றது. "காற்றைவிட வேகமானது பெண்ணவளின் எண்ணங்கள்" தான் தன்னையும் ஊக்கப்படுத்தி, குடும்பத்திலுள்ள அனைவரது முன்னேற்றத்திற்காகவும், ஒரு ஊன்றுகோலாக ஏணிபோல் பணிபுரியும் சேவகி அவள்!


கோடி கோடியாய் வியாபாரக் கணக்குவழக்குகளை மேற்கொள்ளும் ஆண் வர்க்கமே வியந்து பார்க்கும் அளவிற்கு இருக்கும் மங்கையின் வீட்டுச் சிக்கனமும், மளிகைக் கணக்கு வழக்கும் அப்பப்பா! எவ்வளவு தந்திரோபாயங்கள். இவளது எண்ணங்களில் - கணவனின், தகப்பனின், அண்ணனின், தம்பியின் உழைப்பை கஞ்சத்தனம் இன்றி சிக்கனத்துடன் வாழப்பழகும் ஒவ்வொரு பெண்ணும் போற்றப்பட வேண்டியவளே!.

பெண்ணவளின் வைராக்கியம் வைரம் போன்றது. நினைத்ததை நினைத்தபடி சிறப்பான வழிமுறைகளுடன் சிறப்பாக ஒரு பெண்ணால் செய்து சாதிக்கமுடியும் என்பது யாவரும் நன்கறிந்த விடயம்.

கிருஷா - செங்கலடி.




# நாளைய சமுதாயச் சிற்பிகளை



# செதுக்குகின்றது கல்வி...!



எமது சமுதாயத்தின் நாளைய தலைமுறையின் அறிவுசார் தேடலானது, எல்லையில்லாமல் வியாபித்து விரிந்துள்ளது மாத்திரமன்றி, நவீனத்துவமும், கணனித்துவ புரட்சியும் சேர்ந்து, நம்மையெல்லாம் வியப்பிற்குள் எட்டமுடியாத இலக்கை நோக்கி அழைத்துச் செல்கிறது.

மனிதவாழ்வின் உலகப்பெறுமானங்கள் அடித்தட்டு பாமரன் முதல் அகிலத்தையே ஆளும் ஜாம்பவான்கள் வரை கல்வியின் அளவுகோலே அனைத்தையும் தீர்மானித்து நிற்கின்றது என்றால் மிகையாகாது.

இன்றைய உலக ஒழுங்கின் தலைமைத்துவத்தையும், பொருளாதார போட்டாபோட்டியிலும் ஓடிக்கொண்டிருக்கும் அரசுகளும், தலைவர்களும் தமது ஆளுமையைச் செலுத்த, கல்வியில் முதன்மையானவர்களைக் கவருவதற்காகப் பல மறைமுகத் திட்டங்களையும் கவர்ச்சிகரமான வாய்ப்புக்களையும் கொடுப்பதனூடாக, ஏழை நாடுகள் உருவாக்குகின்ற சிறந்த கல்வியாளர்கள் - பலமிக்க இவ்வரசுகளால், தலைவர்களால் கபளீகரம் செய்யப்படுகின்றார்கள். இவ்வாறான நிலையானது, பசியோடும் அறிவுத் தேடலோடும் ஓடிக்கொண்டிருக்கின்ற மாணவ சமுதாயத்தின் கல்வித் தேவையை கேள்விக்குறியாக மாற்றி நிற்கின்றது.

இலங்கை நாட்டின் தமிழர்கள் செறிந்து வாழ்கின்ற வடக்கு - கிழக்கு, மலையகம் போன்ற எமது தாயகப் பிரதேசத்தின் கல்வி நிலையானது, விலை பேசி விற்கப்படுவது, உலகநாடுகளுடன் ஒப்பிடும்பொழுது குறைந்து மதிப்பிடமுடியாத அளவிற்கு, இதன் மாயையும் இதன் தாக்கமும் வியாபித்துள்ளது.

துரதிஷ்டவசமாக கல்வியைப் பாடசாலையில் போதிக்கின்ற ஆசிரியர்களே தமது கல்வி நிறுவனங்களை, வீடுகளை நோக்கி மாணவச் செல்வங்களை மறைமுகமாக இழுக்கின்ற வேதனையான சம்பவங்கள் எம்மண்ணில் இன்னும் தொடர்ந்து கொண்டிருக்கின்றது. இங்கே தான் பாடசாலையில் கற்றல் மாத்திரம் வெற்றியை ஈட்டிவிடாது என்ற மாயையை மாணவர்களின் மனதினில் விதைத்து நிற்கின்றது.

இந்நிலையில் ஐரோப்பியப் பெண்களின் கல்வியோடு ஆசியப் பெண்களின் கல்வியானது 18ஆம், 19ஆம் நூற்றாண்டில் சவாலான விடயமாகப் பார்க்கப்பட்ட பொழுதிலும்,இன்றைய அதன் நிலையில் பாரியதொரு மாற்றத்தைக் காணக்கூடியதாக இருக்கின்றது. அதிலும் தெற்காசியப் பெண்களின் கல்வியானது, பல சமுதாயக் கட்டமைப்புக்கள், சமூகத்தில் பெண்களின் மீது பிரயோகிக்கப்பட்ட பெண் அடிமைத்தனம், கலாசார ஆதிக்கம், சமயக்கோட்பாடுகள், ஆணாதிக்க சமுதாயமுறை என்பவற்றைக் கடந்து, நம்பிக்கைதரும் வகையில் பெண்களின் கல்வியானது மேலோங்கி, நிர்வாகத்துறை போன்ற துறைகளிலும் பெண்களைத் தலைமைத்துவமாகக் கொண்டு இயங்கும் பல ஆயிரக்கணக்கான நிறுவனங்கள் மிகச்சிறப்புடன் இயங்குவது நம்பிக்கை தருவதாக இருக்கின்றது.

பெண்களின் கல்வியானது, ஏலம் பேசி விற்கப்படும் திருமண பந்தத்தில் மாற்றங்களை உண்டுபண்ணி, அந்தஸ்துள்ள ஓர் திருமண பந்தத்தில் அப்பெண்கள் இணைந்துகொள்வதற்கு அனைத்துத் தடைகளையும் தகர்த்தெறிந்துள்ளது. இருந்தபொழுதிலும், இன்றும் அடிமைப்பட்டுக்கிடக்கின்ற பல ஆயிரம் கிராமங்களின் பெண்கள்சார் கல்வி மேலோங்க, ஐ.நா போன்ற உலக அமைப்புக்களும், பெண்களுக்காக உழைக்கின்ற உலக நிறுவனங்களும் இன்னும் வினைத்திறன்மிக்க செயற்பாட்டை முன்னெடுக்க முன்வரவேண்டும்.

சோக்கிரட்டிஸின் மாணவன் பிளேட்டோ, கிரேக்கத்தில் தொடங்கிய "அக்கடமி" இன்று வியாபித்து, உலகில் தனி இராஜ்ஜியமே நடத்துகின்றது. அதேபோல், அரிஸ்டோட்டிலின் மாணவன் அலெக்ஸாண்டர் அக்காலத்தைய ஐரோப்பா, ஆசியா, ஆபிரிக்கக் கண்டங்களை வென்று, தமக்குப் பாடம் புகட்டிய ஆசிரியர்களுக்குப் பெருமை சேர்த்தார்.

அன்றைய வரலாறு அவ்வாறு கடந்துசெல்ல, இன்றோ கல்வியின் வளர்ச்சியானது, இருந்த இடத்தில் இருந்துகொண்டே ஒரு விசையை அழுத்துவதன் மூலம், பல நாடுகளை அடிமைப்படுத்த அணுவாயுதம், உயிரியல் ஆயுதங்கள், இரசாயன ஆயுதங்கள் என்று கல்வியின் வளர்ச்சியானது, மனிதகுல ஆக்கத்திற்கும், அழிவிற்கும் வழிசமைத்துள்ளது.

இன்றைய தினம் அவ்வாறு வளர்ந்த கல்வியின் வளர்ச்சியானது, இந்த ஆக்கம் எழுதப்படும் பொழுது, உலகமே உறைந்துபோயுள்ளது.

வைரஸ் யுத்தமானது ஆறு மாதங்களில் பலிகொண்டுள்ள விலைமதிப்பற்ற மக்களின் பெறுமதிமிக்க உயிர்களைக் காவு கொண்டுள்ளது. அதேபோன்று, 15 மில்லியனுக்கு மேற்பட்ட மனித உயிர்களுக்குத் தொற்றை உண்டுபண்ணியுள்ளது. மனிதகுல வளர்ச்சிக்குப் பயன்படுத்தப்பட்ட ஆற்றலும், அறிவும், தொழில்நுட்பமும் மனிதகுல அழிவுக்குப் பயன்படுத்துவது இங்கு வேதனைதரும் விடயமாகும்.

**"கற்றது கையளவு, கல்லாதது உலகளவு"**
**கல்வி என்னும் ஆயுதம் கொண்டு, உலகத்தை வெல்ல இன்றே திடசங்கற்பம் பூணுவோம்.**

**யூஜித் - மட்டு. நகர்**

## மாற்றத்தை......

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இன்னுமொரு தரப்பில் மத்தியில் கூட்டாட்சி மாநிலத்தில் சுயாட்சி என்னும் தமது அரசியலை நோக்கி அனைத்துத் தமிழ் தரப்பும் வந்துள்ளதாக மார்தட்டிக் கொண்டாலும், அவர்களாலும் தொடர்ந்து வலியுறுத்தி வந்த வடக்கு - கிழக்கு இணைந்த அதிகாரம் என்னும் கொள்கையை மறந்துவிட்டார்கள்போல் தென்படுகின்றது.

ஆகவே உறுதிமிக்க தமிழர்தரப்பு அரசியலானது தனது அரசியல் பலத்தில் பாரியதொரு தேய்மான அரசியலை முன்னெடுத்துள்ளதை வரலாறு சுட்டி நிற்கின்றது. சமஷ்டி என்றவர்களும், ஒருநாடு இருதேசங்கள் என்றவர்களும் - மத்தியில் கூட்டாட்சி மாநிலத்தில் சுயாட்சி நோக்கி நகர்கின்றார்களா? தற்போது ஆட்சியமைப்பவர்களுடன் சேர்ந்து பயணிக்கத் தயார் என்று கூறுவதென்பது தமிழர் தரப்பு அரசியலில் பலமிழந்த நிலையில் மாற்றத்தை நோக்கி நகரும் அரசியலுக்குள் செல்கின்றது என்பதையே சுட்டி நிற்கின்றது.

## போரினால்......

(1ம் பக்கத் தொடர்ச்சி)

எதிர்கால சந்ததியினரின் சமூகப்பிறழ்வுக்கான காரணங்களை ஆராய, தாமதமின்றி சமூகத் தலைவர்கள் குறிப்பாக அரசியல் தலைவர்கள் - சமூக ஆர்வலர்கள் - சமயத் தலைவர்கள், அதிகாரிகள், பெற்றோர்கள் என உடனடியாக முன்வருவதுடன், போதைவஸ்தை நாட்டிற்குள் கடத்தி வருவதை முற்றாகத் தடைசெய்வதற்கு ஆவன செய்வதோடு, ஆக்கபூர்வமான செயற்பாடுகளை முன்னெடுப்பார்களா இத் தலைவர்கள்?

# வாக்காளர் அட்டை விநியோகப் பணிகள் 68 வீதம் பூர்த்தி!

பொதுத் தேர்தலுக்கான வாக்காளர் அட்டை விநியோகப் பணிகள் 68 வீதம் நிறைவடைந்துள்ளதாக தபால்மா அதிபர் ரஞ்சித் ஆரியரத்ன தெரிவித்துள்ளார்.

அத்துடன், இதுவரையில் 110 இலட்சத்து 26 ஆயிரத்து 558 வாக்காளர் அட்டைகள் விநியோகிக்கப்பட்டுள்ளன.

கடந்த மாதம் 26 ஆம் திகதி முதல் ஆரம்பிக்கப்பட்ட வாக்காளர் அட்டைகள் விநியோகிக்கும் பணிகள் எதிர்வரும் 28 ஆம் திகதி வரை இடம்பெறுமென தெரிவித்துள்ளார். இந்த நிலையில், பொதுமக்கள் குறித்த காலப்பகுதியில் வீடுகளிலிருக்குமாறும் தபால்மா அதிபர் ரஞ்சித் ஆரியரத்ன கேட்டுக்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# தேர்தல் களம்!



நாட்டை அபிவிருத்திப் பாதையில் கட்டியெழுப்பும் அனைத்துத் திட்டங்களுக்கும் கைகொடுக்க அனைத்து இன மக்களையும் அழைப்பதாக பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, திருகோணமலை பகுதியில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் தெரிவித்தார்.



ஜனாதிபதி, பிரதமர் முன்பாக எமது நாக்கை அடக்கிவைக்குமாறு மறைமுகமாக கூட்டமைப்பின் தலைமை என்னை பலமுறை எச்சரித்ததாக வடமாகாண முன்னாள் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் மல்லாகம் பகுதியில் இடம்பெற்ற சந்திப்பொன்றில் தெரிவித்துள்ளார்.



இத்தேர்தலில் எமது மக்கள் மீண்டும் ஒருமுறை பிழை விட்டால் அப்பிழை நிரந்தரமான ஒரு விளைவு-களை ஏற்படுத்தும் என்பதை மக்கள் விளங்கிக்கொள்ள வேண்டுமென தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் வவுனியாவில் இடம்பெற்ற பிரசாரக் கூட்டமொன்றில் தெரிவித்துள்ளார்.



தமிழ் மக்கள் எதிர்பார்க்கின்ற நியாயமான அபிலாஷைகளுக்கு எதிராக எந்தவிதமான அழுத்தங்கள், தடைகள் ஏற்பட்டாலும், அவை நிறைவேற்றப்படும் என்று ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கிளிநொச்சியில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பொன்றில் தெரிவித்தார்.



"தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்பது தமிழரின் அரசியல் ஒற்றுமையை பிரதிபலிக்கும் ஓர் அமைப்பு என்பதில் மாற்றுக்கருத்துக்கு இடமில்லை என்றே நான் கருதுகிறேன். அந்த ஒற்றுமை என்பது தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள்ளும் இருக்க வேண்டுமென வாஞ்சிக்கிறேன்." என்று தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளரான சசிகலா ரவிராஜ் தெரிவித்துள்ளார்.



தவறான தகவல்களை வழங்கி இளையோரை தவறாக வழிநடத்த சிலர் முற்படுகின்றார்களென தமிழரசுக் கட்சியின் தலைவரும் யாழ் மாவட்ட பாராளுமன்ற வேட்பாளருமான மாவை சேனாதிராஜா தெரிவித்துள்ளார்.

திருமண விடயங்கள், காணி, வீடு விற்பனை, வீடு குத்தகை, வியாபார விளம்பரங்கள், தேர்தல் பிரசார விளம்பரங்கள், விழாக்கள், மரண அறிவித்தல் போன்ற சகல விளம்பரங்களையும் "எழுச்சி" பத்திரிகை ஊடாக கட்டணம் செலுத்தி பிரசுரிக்க முடியும்.

தொடர்புகளுக்கு:
திரு.ந.ராஜமனோகரன்,
இல. 76, கல்லூரி வீதி,
நீராவியடி, யாழ்ப்பாணம்
தொலைபேசி இல.: 0772576536
மின்னஞ்சல் முகவரி: ezhuchi295@gmail.com

# யாழ். மாவட்டம் தொடர்பில் கஃபே அமைப்பின் பார்வை!

தேர்தலில் வன்முறைகள் இடம்பெறக் கூடிய மாவட்டங்களில் வடக்கில் யாழ். மாவட்டம் அடையாளப்படுத்தப்பட்டுள்ளதாக 'சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலுக்கான மக்கள் அமைப்பின் பணிப்பாளர் அகமட் மனாப் தெரிவித்துள்ளார். கஃபே அமைப்பின் ஏற்பாட்டில் வவுனியாவில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர், "தேர்தல் தொடர்பாக பல்வேறு கருத்துக்கள் பரிமாறப்பட்டு வருகின்ற இந்த சந்தர்ப்பத்தில் அமைதியான தேர்தலுக்காக ஒன்றுபடுவோம் என்ற நோக்கில் கிராமத்திற்கு கிராமம் என்ற வேலைத்திட்டத்தை நாங்கள் ஆரம்பித்திருக்கின்றோம். அந்தவகையில், தேர்தல் பிரசாரம் தொடர்பாக பல்வேறு முறைப்பாடுகள் எமக்குக் கிடைக்கப்பெற்றுள்ளன.

ஒரே கட்சியில் போட்டியிடும் வேட்பாளர்களுக்கு எதிராக வெறுப்பூட்டத்தக்கதான பிரசாரங்கள் அதிகரித்துள்ளதுடன், பொய்யான பிரசாரங்களும் அதிகளவில் பரப்பப்பட்டுள்ளதாக முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றிருக்கின்றது. வன்முறைகள் அதிகரித்த சில பகுதிகளை பொலிஸ் திணைக்களத்திற்கு அடையாளப்படுத்தியுள்ளோம் என்றும் தெரிவித்தார்.

# மாணவர்களுக்கான புதிய நடைமுறை!

கல்வியமைச்சின் அறிவுறுத்தல்களுக்கு அமைய மீண்டும் பாடசாலைகள் ஆரம்பிக்கப்படுகின்ற நிலையில் சில நடைமுறைகளில் மாற்றம் கொண்டுவரப்பட்டுள்ளன.

'கொவிட் 19' வைரஸ் பரவல் தொடர்பில் ஏற்பட்டுள்ள நிலைமை காரணமாக கடந்த சில மாதங்கள் பாடசாலைகள் மூடப்பட்டிருந்தமையைக் கருத்திற்கொண்டு, மீண்டும் பாடசாலைகள் ஆரம்பிக்கப்படுகின்ற நிலையில், 11, 12, 13ஆம் தர மாணவர்களுக்கான கல்வி நடவடிக்கைகள் காலை 7.30 மணிக்கு ஆரம்பிக்கப்பட்டு பிற்பகல் 3.30 மணிக்கு நிறைவு செய்வதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக கல்வியமைச்சு அறிக்கை ஊடாகத் தெரியப்படுத்தியுள்ளது. ஏனைய மாணவர்களுக்கு ஆகஸ்ட் மாதம் 10ஆம் திகதி பாடசாலை கல்வி நடவடிக்கைகள் ஆரம்பிக்கப் படவுள்ளது.

மாணவர்கள் பாடசாலைக்கு வரும்போது சுகாதார அதிகாரிகளினால் வழங்கப்பட்டுள்ள ஆலோசனை மற்றும் வழிகாட்டல்களுக்கமைய கல்வி நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என பாடசாலை அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

2020ஆம் ஆண்டு பொது தேர்தலுக்கு பாடசாலைகளை தயார்ப்படுத்துவது தொடர்பில் விழிப்புணர்வுகளை வழங்குவதற்குச் சகல பாடசாலை அதிபர் மற்றும் பிரதி அதிபர்கள் யூலை மாதம் 28 ,29, 30, 31ஆம் திகதிகள் பாடசாலையில் தங்கியிருக்க வேண்டும்.

குறித்த காலப்பகுதியில் பாடசாலை மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளுக்கு பாதிப்பு ஏற்படாதவாறு உதவித் தேர்தல் ஆணையாளர்களுடன் கலந்துரையாடி, தேர்தல் ஏற்பாடுகளை பாடசாலைகளில் முன்னெடுப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கல்வி அமைச்சு அறிவுறுத்தியுள்ளது.




உண்மையை உரக்கச் சொல்வோம்...

இப்பத்திரிகை Companian Farm (PVT) Ltd. நிறுவனத்தினரால் இல.34, பிறவுண்.வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள ஜெயஸ்ரீ அச்சகத்தில் 29.07.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.